ஸ்ரீ சாரதா புஜங்கம் (தமிழ்)

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

*********************************************

௧)

அமுதக் குடம்போல
அழகான கொங்கை !
அருள்செய்ய என்றும்
காத்திருக்கும் கருணை !
நிலவெனவே பொளிரும்
அழகுமிகு முகமே !
அதிலொளிரும் இதழோ
செங்கொவ்வைப் பழமே !
சதா என் தாயானாய்
சாரதா சரணம் !

௨)
வழிகின்ற கருணை
விழியோடு ஈரம் !
விழித்திருக்கும் கோலம்
துங்கைநதி ஓரம் !
கரத்தாலே காட்டும்
முத்திரையே ஞானம் !
மங்கையரில் மணியாய்
மங்கலம் கூட்டும் !
சதா என் தாயானாய்
சாரதா சரணம் !

PSDPrasad Music

ஸ்ரீ சாரதா புஜங்கம் (தமிழ்)

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

*************************************

3)

நெற்றியிலே அழகாக
நெளிகின்ற திலகம் !
கரத்தோடு ஜபமாலை
அதில்சுழலும் உலகம் !
சரணென்று வருவார்க்கு
அருள் வார்க்கும் கன்னம் !
சங்கீதம் எனுமிசையில்
நிலையான எண்ணம் !
சதா என் தாயானாய்
சாரதா சரணம் !

4)

வகிடெடுத்த சடையில்
ஒளிர்கின்ற கூந்தல் !
கருமானை விஞ்சும்
கருநிறத்துக் கண்கள் !
இந்திரனும் மயங்கும்
குரல் கிளியைப் போலே !
அமுதம்கடை லீலை
சுகம் த்யானத்தாலே !
சதா என் தாயானாய்
சாரதா சரணம் !

PSDPrasad Music

ஸ்ரீ சாரதா புஜங்கம் (தமிழ்)

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

******************************

5)

துறவியர்கள் போற்றும்
பேரமைதிக் கோலம் !
படர்கொடியைப் போலே
பளபளக்கும் தேகம் !
கூந்தலதன் நீளம்
கண்கள்வரை நீளும் !
ஆதியென வந்த
அந்தமிலா ரூபம் !
சதா என் தாயானாய்
சாரதா சரணம் !

6)

சிங்கத்தில், அன்னத்தில்
கருடனில் ஏறி..
மான், பரி, மத யானை
காளைமேல் ஏறி..
ஒன்பது வடிவமாய்
ஒளிர்கின்ற போதும்..
உள்ளோடு நிலையாக
சாந்தம் எப்போதும் !
சதா என் தாயானாய்
சாரதா சரணம் !

PSDPrasad Music

ஶ்ரீ சாரதா புஜங்கம் (தமிழ்)

தமிழாக்கம்: ஶ்ரீதேவிபிரசாத்

******************************

௭)

என்னிதயக் கமலத்தை

தேனீபோல் சுற்றும் ..

தீக்கொழுந்து போலொளிர்ந்து

ஜகம்கவரும் ரூபம் !

புகழ் போற்றி பாடும்

ஸ்தோத்திரம் யாவும்..

பாடலென, நடனமென

உன்னுருவாய் ஒளிரும் !

சதா என் தாயானாய்

சாரதா சரணம் !

௮)

காதோடு குண்டலங்கள்

அழகாக ஆடும் !

முகத்தோடு மெல்லியதாய்

குறுநகையும் கூடும் !

வாடாத தாமரையாய்

விழிகளவை மின்னும் !

வணங்கிடவே பிறவிக்கடல்

கடப்ப தெளிதாகும் !

PSDPrasad Music